**பஸ்கொட பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பஸ்கொட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பஸ்கொட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை மேற்கொண்டு வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த ஊருபொக்க பஸ் தரிப்பிட நீர் தொட்டி நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக ரூபா 2,859,239 தொகை நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் 30 திகதி உடன்படிக்கை மேற்கொண்டு அத் தினத்தில் வேலை ஆரம்பிக்கப்பட்டு 2023 மார்ச் 10 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டுகளில் ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்று செயற்படுத்தப்பட்டு இருக்காத 07 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 280,000 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | இந்த நிர்மாணவேலை தற்போது பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 236,650 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மதிப்பீடொன்று சிட்டையிடப்பட்ட வருமானத்துடன் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடந்த ஆண்டுகளின் போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிர்மாணவேலை இடைநிறுத்தப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான கட்டிடங்களின் அபிவிருத்தி வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,920,532 இற்கான செலவு கணக்கீடு செய்திருக்கவில்லை. | நாட்குறிப்பின் மூலம் சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி, சாட்டப்பட்ட பெறுமதி ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 12,000,000 தொகைக்கான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கும் வரை விற்பனைப் பெறுமதியின் மீது கணக்கீடு செய்யப்பட்டது என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 185 | சபையினால் பொது நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல்களுக்காக பேணப்பட்டு வரும் நடைமுறைக் கணக்கின் சராசரி காசு மீதி ரூபா 3,235,196 தொகை காணப்பட்டதுடன் அம் மிகைப் பணத்தை முதலீடு செய்தல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | மிகைப் பணம் நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 31,630,036 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,036,507 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 1,991,500 | 2,335,586 | 1,910,523 | 512,283 | 2,047,000 | 2,66,531 | 2,094,244 | 87,220 |
| ii. | வாடகை | 10,883,760 | 7,256,696 | 7,886,314 | 675,470 | 9,808,960 | 7,016,792 | 6,302,167 | 1,305,088 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 821,150 | 1,042,543 | 981,105 | 195,438 | 901,100 | 134,750 | 134,750 | 134,000 |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 4,421,200 | 6,682,253 | 6,141,871 | 742,815 | 5,093,900 | 2,652,215 | 2,808,661 | 202,433 |
| | | ------------ | ------------- | -------------- | ------------ | ------------ | -------------- | -------------- | ------------ |
| | மொத்தம் | 18,117,610 | 17,317,078 | 16,919,813 | 2,126,006 | 17,850,96 | 11,870,288 | 11,339,822 | 1,728,741 |
| | | ======== | ======== | ======== | ======= | ======= | ======== | ======== | ======= |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134 இற்கு இணங்க செயற்பட்டு இலக்கம் 2284 மற்றும் 2022 ஜூன் 10 திகதிய வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள ஆதனங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனங்களை இனங்காண்பதற்காக கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்குச் சொந்தமான கடையறைகளை வாடகைக்கு கொடுத்திருந்த 36 பேரிடம் ரூபா 440,410 இற்கான கடை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பந்தி 05 இற்கு இணங்க சபைக்கு சொந்தமான 18 கடையறைகள் தொடர்பாக கடை வாடகை உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன், 06 ஆவது பந்திக்கு இணங்க சபைக்கு சொந்தமான மூன்று வர்த்தக தொடர் கட்டிடங்களின் 48 கடையறைகளின் வாடகைத் தொகை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 154,773 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 26,567,570 தொகையாகக் காணப்பட்டது. | இந்த ஆண்டின் போது முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ஏதும் கிடைத்திருக்கவில்லை என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பஸ்கொட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் ஒரு வாரத்தினுள் சுமார் 02 தொன் குப்பைகள் சேகரிக்கப்படுவதுடன் உக்கக் கூடிய குப்பைகளை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் சேதனப் பசளை செயற்களத்தில் போதியளவு இடவசதி காணப்படாமையால் மற்றும் சேதனப் பசளை செயற்களத்திற்கு கூரை ஒன்று காணப்படாமையால் சேதனப் பசளை உற்பத்தி செயற்திறனுடன் மேற்கொள்ளப்படவில்லை எனவும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்கு நிரந்தர மற்றும் முறையான வேலைத் திட்டம் ஒன்று மீளாய்வாண்டு இறுதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை. | கூரையொன்று தயாரித்துக் கொள்வதற்காக தேவையான ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | குப்பைகளை இடுவதற்காக முறையான மற்றும் நிரந்தர வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 126 இற்கு இணங்க செயற்பட்டு நகர் சாராத அதிகாரப் பிரதேசத்துக்குள் கட்டிடம் நிர்மாண வேலைகள் தொடர்பாக திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி பிரமாணங்கள் மற்றும் சபைக்கு சொந்தமான பொது விளையாட்டுத் திடல் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பான பிரமாணங்கள் அடங்கிய துணை சட்ட ஆக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. | துணை விதி ஒன்று சட்ட ஆக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | துணை விதிகள் விரைவாக சட்ட ஆக்கஞ் செய்யப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளாமல் நகர அபிவிருத்தி அதிகாரப் பிரசேத்தில் 07 நிர்மாண வேலைகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்களுக்கு அடங்கியுள்ள 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணைக்கு இணங்க ரூபா 2,056,115 தொகை கட்டணம் அறவீடு செய்து அந்த நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வரைபுகள் அனுமதிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்தவேலை நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பஸ்கொட பிரதேச சபைக் கட்டிடத்தின் முதலாம் மாடியில் நகர மண்டபம் நிர்மாணிப்பதற்காக ரூபா 38,097,898 இற்கான தொகைக்கு கடந்த ஆண்டு ஜுலை 09 ஆந் திகதி ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொண்டு ரூபா 12,651,795 இற்கான வேலைப் பகுதியை நிறைவேற்றிய பின்னர் ஒப்பந்தவேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. கூரைக்கு பயன்படுத்தப்பட்டிருந்த இரும்புப் பாலங்கள் துருப்பிடித்தல் மற்றும் கட்டிடத்தின் கீழ் மாடிக்கும் சேதம் ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடத்தின் பாதுகாப்பிற்காக விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் பிரதேச சபைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டதின் கீழ் மாவரல சந்தை கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,961,440 இற்கான உடன்படிக்கை மேற்கொண்ட தொகைக்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட் 22 திகதி ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொண்டு ரூபா 3,628,277 இற்கான வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தவேலையின் நிர்மாணவேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், மீதியான வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்காமையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதிகளும் சேதம் ஏற்பட்டு கொண்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | நிர்மாணவேலையின் அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | விரைவாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |